முருகப்பெருமான் துணை

**மகான் ஏயர்கோன் கலிகாம நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

08.02.2023, புதன்கிழமை

1. ஞானமாம் அகத்திய சன்மார்க்கம்
நம்பிக்கை தரும் உயர் மார்க்கம்
வானவர்கள் போற்றும் மார்க்கம்
வையகம் மாற்றும் மார்க்கமாகும்
2. ஆகவே உலக மக்களெல்லாம்
அடிபணிந்து ஏற்று வர
செகமே மாறுமெனக் கூறி
செப்பிடுவேன் அனுகூல ஆசி
3. ஆசிதனை சுபகிருது கலை திங்கள்
அய்யைந்து திகதி புந்திவாரம்
(சுபகிருது வருடம் தை மாதம் 25 ம் நாள் 08.02.2023, புதன்கிழமை)
ஆசிதனை ஏயர்கோன் கலிகாம நாயனாரும்
அருளுவேன் உலக மாற்றம்காண
4. காணவே அரங்கன் மார்க்கம்
கட்டாயம் உலகம் எங்கிலும்
ஞானமாகப் பரவி நின்றிட
நாடெங்கிலும் தயவுப் பெருகும்
5. பெருகவே உயிர்கொலை செய்யும்
பேதமை முழுமைபட விலகி
தருமமுடன் கூடிய சைவ நெறி
தவநெறி போல நிலைத்து
6. நிலைத்து உலகம் நிறைந்திட
நீதி நெறிக்கு மனித செயல்பாடு
பிழையற உறுதிகொண்டு வந்து
பேருலகமே நல்மாற்றம் காண்கும்
7. காண்கவே சகல நடவடிக்கையும்
கண்ணியம் குறையாதபடி தேறி
உண்மை நிறைந்த ஆன்மீக
உயர் ஞானவான்கள் சூழ்ந்த
8. சூழ்ந்த பேருலகமாக மாறி
சுத்த நெறி சைவ நெறியே
சூழ்ந்து மனித மனம்தனை
சித்தம் தெளிவிக்கும் வண்ணமாக
9. ஆகவேத் தேறி அவரவரும்
அரங்கன் தேடலின் வழி
செகத்தில் ஞானிகள் ஆவர்
சித்திகளாக பொது சேவைதனை

10. சேவைதனை கடமையாகவும்
சேவாதிகளான மக்கள்தனை
அவனியில் காக்கும்படியான
ஆளுமை தனையும் நிறுவி

11. நிறுவியே ஞான ஆட்சிதனை
நிலவுலகில் படைத்தருள்வர்
ஆறுமுக அரங்க ஞானியின் வழி
அகிலத்தில் அற்புதம் படைப்பர்

அனுகூல ஆசி முற்றே

–சுபம்–